# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2142/70 - 2019 සැප්තැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.26

*2142/70 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/DS/2/9/4/03-2016.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
இல.: 4-3/9/2016/WS/520.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

| | |
|---|---|
| ஆரம்ப வரைபட இல. | : YA/JFF/2017/21 பிபியா 2932 |
| கிராமம் | : வண்ணார்பண்ணை தென்கிழக்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : J/80, பெரிய கடை - வட்டார இலக்கம் 17 (புதிய இலக்கம் 15) |
| பிரதேச செயலாளர் பிரிவு | : யாழ்ப்பாணம் |
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : வடக்கு மாகாணம் |
| நோக்கம் | : கழிவு நீரிறைக்கும் சாலை இலக்கம் 19 இனை நிர்மாணிப்பதற்காக |

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : அடியார்குணாளன் குளம்/கன்னாந்திட்டி குளம்; விபரம் : கன்னாந்திட்டி குளம்; உரிமை கோருபவர் : மாநகர சபை, யாழ்ப்பாணம்; விஸ்தீரணம்: 0.0150 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு கார்த்திகை



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். சுதர்சன்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.
2019, செத்தெம்பர் 19.

10 - 372

---

## காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4-3/8/2017/பீஸீ/507.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: HIK/LND/06/29.

பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பகுதியில், 76 ஏ அகுரெல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அகுரெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட கா/4433 மற்றும் 2019.07.31 ஆந் திகதி அடிப்படை நிலப்படத்தில் காட்டப்பட்டுள்ள அளவு 0.0374 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட தென்னாஹந்திவத்தை அல்லது கன்கந்தைவத்தை அல்லது மாவதவத்தை என்னும் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணி.

*01.* **துண்டு இல. 01**

காணியின் பெயர்: தென்னாஹந்திவத்தை அல்லது கன்கந்தை வத்தை அல்லது மாவதவத்தை; விஸ்தீரணம்: 0.0374 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹிக்கடுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். ஏ. யூ. ஜீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை.
2019, செத்தெம்பர் 12.

10 - 373

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.